புயல் நிவாரண நிதி...



ஆந்திர முதல்வர் என்.சந்திரபாபு நாயுடுவிடம் நிவாரண நிதி ரூ.1 கோடிக்கான வங்கி வரைவோலையை வழங்கிய விஜடி வேந்தர் கோ. விசுவநாதன். உடன், விஜடி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன், விஜடி அமராவதி வளாகத்தின் பதிவாளர் ஜகதீஷ் சந்திர முடிகந்தி.

அமராவதி சைனிக் பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை

உடுமலை, நவ.4: உடுமலையை அடுத்துள்ள அமராவதி நகர் சைனிக் பள்ளியில் 2027-28 ம் கல்வி ஆண்டில் மாணவர்கள் சேர்க்கைக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

திருப்பூர் மாவட்டம், உடுமலையை அடுத்த அமராவதி நகரில் சைனிக் பள்ளி உள்ளது. இங்கு 2027-28-ஆம் கல்வி ஆண்டில் 6-ஆம் வகுப்பு மற்றும் 9-ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கான அகில இந்திய சைனிக் பள்ளிகளின் நுழைவுத் தேர்வுக்கு ஆன்லைன் விண்ணப்ப விநியோகம் கடந்த 3-ஆம் தேதி முதல் தொடங்கியுள்ளது. விண்ணப்பதாரர்கள் https://exams.nta.nic.in/sainik-school-society/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க முடியும். ஆன்லைனில் விண்ணப்பிக்க கடைசி தேதி 02-12-2026 ஆகும். 6-ஆம் வகுப்பு சேர்க்கைக்கு விண்ணப்பதாரர் (ஆண் / பெண்) 31.03.2027 அன்று 10 முதல் 12 வயதுக்குள் இருக்க வேண்டும். 9-ஆம் வகுப்பு சேர்க்கைக்கு விண்ணப்பதாரர் (ஆண் /பெண்) 31.03.2027 அன்று 13 முதல் 15 வயதுக்குள் இருக்க வேண்டும். சேர்க்கையின் போது அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் இருந்து 8-ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

முழுமையான விவரங்களை https://nta.ac.in/ என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம்.

சிறப்பு 'டெட்' தேர்ச்சி மதிப்பெண்

அனைத்து பிரிவினருக்கும் 60-ஆக நிர்ணயிக்க அரசுக்கு வலியுறுத்தல்

சென்னை, நவ. 4: பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான சிறப்பு டெட் தேர்ச்சி மதிப்பெண்ணை அனைத்து பிரிவினருக்கும் 60 - ஆக நிர்ணயிக்க வேண்டும் என பள்ளிக் கல்வித் துறை அமைச்சருக்கு ஆசிரியர் அமைப்பு அனுப்பியுள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து துறை அமைச்சர் ராஜ்மோகனுக்கு தமிழ்நாடு உயர்நிலை-மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக நிறுவனர் தலைவர் அ.மாயவன், மாநிலத் தலைவர் சி.ஜெயக்குமார், மாநில பொதுச்செயலாளர் மா.குமரேசன் ஆகியோர் கூட்டாக அனுப்பியுள்ள மனு:

பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களை டெட் தேர்வு எழுதச் சொல்வதும், அத்தேர்வில் ஒரு பிரிவு ஆசிரியர்கள் 150-க்கு 60 மதிப்பெண் எடுத்தால் தேர்ச்சி என்று அறிவிப்பதும், அதேநேரத்தில் மற்றொரு பிரிவினர் 75 மதிப்பெண் பெற்றால்தான் தேர்ச்சி என்பதும், இன்னொரு பிரிவினர் 90 மதிப்பெண் எடுத்தால்தான் தேர்ச்சி என்று அறிவிப்பதும் சமூகநீதிக்கு முற்றிலும் முரண்பட்டது.

ஒரே பள்ளியில் பணியாற்றும் ஒரு ஆசிரியர் 60 மதிப்பெண் எடுத்து தேர்ச்சி அடைகிறார். மற்றொரு பிரிவு ஆசிரியர் 74 மதிப்பெண் எடுத்தும் இன்னொரு பிரிவு ஆசிரியர் 89 மதிப்பெண் பெற்றும் தேர்ச்சி பெறவில்லை என கூறி அவர்களின் வேலையை பறித்து பதவி உயர்வை உரிமை பறித்து அவரை வீதியில் நிறுத்துவது எந்த வகையில் நியாயம்?

இனசுழற்சி முறைக்கு நாங்கள் ஒருபோதும் எதிரானவர்கள் அல்ல. அதை மனபூர்வமாக வரவேற்கிறோம்.

இந்த இன சுழற்சி முறையை புதிய நியமனங்களுக்கு கடைபிடிக்க வேண்டுமே ஒழிய, ஏற்கெனவே இனசுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து 10, 15, 20 ஆண்டுகள் பணிபுரிந்து கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கும் கடைப்பிடிப்பதை உடனடியாகக் கைவிடவேண்டும்.

இன சுழற்சி முறையில் நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சி மதிப்பெண்களான 60,75,90 என்பதை மாற்றி அனைத்துப் பிரிவு ஆசிரியர்களுக்கும் டெட் தேர்ச்சி மதிப்பெண் 60 என நிர்ணயிக்க வேண்டும். இதுதொடர்பான அறிவிப்பை அரசு விரைவில் வெளியிட வேண்டும். இந்த புதிய தேர்ச்சி மதிப்பெண்ணை கடந்த அக். 12-ஆம் தேதி வெளியிடப்பட்ட சிறப்பு டெட் தேர்வு முடிவில் இருந்தே நடைமுறைப்படுத்தி, மீண்டும் ஒரு திருத்தப்பட்ட டெட் தேர்வு முடிவை வெளியிட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராக கவிதா ஜவஹர் நியமனம்



சென்னை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை முதல்வர் ச.ஜோசப் விஜய்யை சந்தித்து வாழ்த்துப் பெற்ற மதுரை உலகத் தமிழ் சங்கத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட கவிதா ஜவஹர். உடன் அமைச்சர் ராஜ்மோகன்.

சென்னை, நவ.4: மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராக பட்டிமன்றப் பேச்சாளர் கவிதா ஜவஹர் நியமிக்கப்பட்டார்.

தமிழகத்தின் தமிழ் மொழி, பண்பாட்டை வளர்க்கும் நோக்கில் செயல்பட்டு வரும் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராக பட்டிமன்றப் பேச்சாளர் கவிதா ஜவஹரை நியமித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது.

உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்தல், உலகம் முழுவதும் உள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள், சங்கங்கள், தமிழ் ஆய்வு நிறுவனங்களை ஒரே குடையின் கீழ் இணைத்தல், பயிலரங்குகள் மற்றும் மாநாடுகளை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட பணிகள் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவரின் கீழ் வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ச.ஜோசப் விஜய்யை கவிதா ஜவஹர் புதன்கிழமை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

நிகழ் நிதியாண்டுக்குள் 50,000 விவசாய மின் இணைப்புகள்

அதிகாரிகளுக்கு மின் வாரியம் உத்தரவு

சென்னை, நவ. 4: தமிழகத்தில் நிகழ் நிதியாண்டுக்குள் (2026-27) 50,000 விவசாய மின் இணைப்புகளையும் வழங்குவதற்கான பணிகளைத் தீவிரப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு மின் வாரியம் உத்தரவிட்டது.

தமிழகத்தில் இதுவரை சுமார் 24 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாய மின் இணைப்புகள் உள்ளன. புதிய இணைப்புக்காக 4 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் விண்ணப்பித்து காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில், 2021-22-ஆம் நிதியாண்டில் ஒரு லட்சம் இணைப்புகள், 2022-23-ஆம் ஆண்டில் 50,000 இணைப்புகள், 2023-24-ஆம் ஆண்டில் 18,975 இணைப்புகள், 2024-25-ஆம் ஆண்டில் 15,000 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், 2026-27-ஆம் நிதியாண்டில் 50,000 விவசாய மின் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஏற்கெனவே இணைப்பு வழங்கத் தயார் நிலையில் உள்ள 48,944 விண்ணப்பங்கள், புதிதாகப் பெறப்பட்ட 1,056 விண்ணப்பங்கள் என மொத்தம் 50,000 விண்ணப்பங்களுக்கு இணைப்பு வழங்கப்பட உள்ளது.

இதற்காக வட்டார வாரியாக இலக்குகளை நிர்ணயித்து, அனைத்து மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர்களுக்கு மின் வாரிய இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

அரசு நிதி ஒதுக்கும் திட்டங்களின் கீழ் விண்ணப்பித்துள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின் இணைப்புக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், மின் இணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், மோட்டார் மற்றும் பம்பு செட்டுகளைப் பொருத்துவதற்கான தயார் நிலையை உறுதிப்படுத்துதல் ஆகிய பணிகளை மின்பகிர்மான விதிகளின்படி மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேவையான மின் சாதனங்கள் அதிக அளவில் தேவைப்பட்டால், உத்தரவு கிடைத்த 7 நாள்களுக்குள் தலைமைப் பொறியாளர்கள், மின்வாரியத் தலைமை அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக காத்திருக்கும் விவசாயிகளுக்கு இணைப்புகளை விரைந்து வழங்கும் வகையில், நிகழாண்டுக்கான 50,000 இணைப்புகளையும் உரிய காலத்துக்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறு மின்வாரியம் உத்தரவிட்டது.

குரூப் 4 தேர்வுக்கு விண்ணப்பிக்கும் அவகாசம் நீட்டிப்பு: டிஎன்பிஎஸ்சி

சென்னை, நவ. 4: குரூப்-4 தேர்வுக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் நவ. 8-ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) தெரிவித்தது.

தமிழகத்தில் கிராம நிர்வாக அலுவலர், பல்வேறு துறைகளில் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், வருவாய் உதவியாளர் உள்பட பல்வேறு பதவிகளில் 6,574 காலியிடங்களை நிரப்புவதற்கான ஒருங்கிணைந்த குரூப்-4 தேர்வுக்கான அறிவிப்பை டிஎன்பிஎஸ்சி கடந்த அக்.6-ஆம் தேதி வெளியிட்டது.

இதற்கான இணையவழி விண்ணப்பப் பதிவு அன்றைய தினத்தில் இருந்தே தொடங்கியது. இத்தேர்வுக்கு நவ. 5-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது விண்ணப்பிக்கும் அவகாசம் நவ. 8-ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது.

அரசுப் பணிகளில் நேரடி நியமனத்துக்கான வயது உச்ச வரம்பை, மேலும் 5 ஆண்டுகள் உயர்த்தப்படுவதாக தமிழக அரசின் மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் கடந்த அக். 30-ஆம் தேதி அரசாணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த அவகாசம் நீட்டிக்கப்படுவதாக டிஎன்பிஎஸ்சி செயலர் பானோத் ம்ருகேந்தர் லாலா புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே, குரூப்-4 தேர்வுக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் (www.tnpsc.gov.in) நவ. 8-ஆம் தேதி நள்ளிரவு 11.59 மணி வரை விண்ணப்பிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். குரூப் 4 பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு அடுத்த ஆண்டு ஜன. 10-ஆம் தேதி நடைபெற உள்ளது.

குரூப் 4 தேர்வுக்கு விண்ணப்பிப்போர் எண்ணிக்கை 56% குறைந்தது ஏன்?

சென்னை, நவ. 4: தமிழகத்தில் குரூப்-4 தேர்வுக்கு விண்ணப்பிப்போர் எண்ணிக்கை 4 ஆண்டுகளில் 56% அளவுக்கு சரிந்துள்ளது ஏன்? என 'வீ த லீடர்ஸ்' அமைப்பின் தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பினார்.



இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் புதன்கிழமை வெளியிட்ட பதிவு:

குரூப்-4 தேர்வுக்கு 2022-ஆம் ஆண்டு, 22.06 லட்சம் பேர் விண்ணப்பித்த நிலையில், 2024-இல் 20.37 லட்சமாகவும், 2025-இல் 13.89 லட்சமாகவும், நிகழ் ஆண்டு, தற்போது வரை வெறும் 9.80 லட்சம் பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர். 4 ஆண்டுகளில் சுமார் 56 சதவீதம் சரிவு என்பது சாதாரணமாகக் கடந்து செல்லக்கூடிய விஷயமல்ல.

பல ஆண்டு கால உழைப்பையும் பணத்தையும் செலவிட்டு, அரசுப் பணிக்காகத் தயாராகும் இளைஞர்களுக்கு உரிய காலத்தில் முடிவுகளும், நியாயமான வாய்ப்புகளும் கிடைப்பதில்லை. முடிவுகள் வெளியாவதில் காலதாமதம், தேர்வுக்குப் பிறகு பணி நியமனம் வழங்குவதில் தாமதம், தேர்வு நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை குறித்த சந்தேகங்கள், முறைகேடுகள் என தேர்வு எழுதும் இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் ஏராளம்.

தேர்வாணையத்தின் மீது நம்பிக்கை குறையத் தொடங்கினால், அது கவலைக்குரிய அறிகுறி. விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை ஏன் ஆண்டுதோறும் இவ்வளவு வேகமாகக் குறைந்து வருகிறது என்பதை தமிழக அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றார் அவர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (இ.எப்பி-இரண்டு உறை)-இளம் வாரியாக பின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண்.	12 to 14 / கோ. கூ.கு. நீ.திப.ராமரிப்பு/ மு.அ 1 / ஒ பி / 2026/ நாள். 04.11.2026
ஒப்பந்தக்காரர் தகுதி	முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்)
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர்	தலைமைப் பொறியாளர், த.கு.வ.வா, மதுரை, தமிழ்நாடு
ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம்	05.11.2026 முதல் 07.12.2026, 15.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத்தொகை	Online or eBG முறையில் இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம்	13.11.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு தலைமைப் பொறியாளர் அலுவலகம்
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	07.12.2026 அன்று 15.00 மணிக்குள்
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	08.12.2026 அன்று 15.30 மணிக்கு இணையதளம் "https://tntenders.gov.in"

ஒ.கே. எண்	திட்டத்தின் பெயர்	பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி 18 % உட்பட)	முன்வைப்பு தொகை
	கீழ்க்காணும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை 01.01.2027 முதல் 31.03.2029 வரை இயக்குதல், பராமரித்தல், பழுது நீக்கும் பணிகள் மற்றும் இரசாயனங்கள் வழங்குதல் உட்பட.		
12	தென்காசி மாவட்டத்திலுள்ள 8 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் (சிப்பம் 12 C)	ரூ. 22.56 கோடி	ரூ. 16.92 இலட்சம்
13	விருதுநகர் மாவட்டத்திலுள்ள 2 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் (சிப்பம் 19 B)	ரூ. 21.47 கோடி	ரூ. 16.11 இலட்சம்
14	விருதுநகர் மாவட்டத்திலுள்ள 637 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டங்கள் (சிப்பம் 20 B)	ரூ. 22.71 கோடி	ரூ. 17.04 இலட்சம்

செ.ம.தொ.இ/ 3422 /ஒப்பந்தப்புள்ளி/2026 — தலைமைப் பொறியாளர் (பொ), த.கு.வ.வாரியம், மதுரை

தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்

தமிழ்நாடு அரசு

பெத்தாம்பாளையம் பேரூராட்சி
பேரூராட்சிகள் நிர்வாகம், ஈரோடு மாவட்டம்

முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்புறமேம்பாட்டு இயக்கம் 2026-2027

தார்சாலைப்பணி

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

நக.எண். 165/2026, நாள். 03.11.2026

1. முழுமையான விவரங்களுக்கு https://tntenders.gov.in இணையதள முகவரியை பார்வையிடலாம்.
2. ஈரோடு மாவட்டம், பெத்தாம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரால் சாலைப் பணி (ஒன்று) செய்திட மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளில் இலவசமாக 05.11.2026 முதல் 25.11.2026 வரை உள்ள கால இடைவெளியில் எடுத்துக் கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள். 25.11.2026 மாலை 3.00மணி
   ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 25.11.2026 மாலை 3.30மணி

செயல் அலுவலர்,
செ.ம.தொ.இ/3385/ஒப்பந்தப்புள்ளி/2026 — பெத்தாம்பாளையம் பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்ஸியல் சர்வீசஸ் லிமிட்டெட்

பதிவு அலுவலகம் - ராதிகா, 2 வது தளம், ஸ கார்டன சாலை, நவரங்புரா, அஹமதாபாத் - 380 009

பண்டக அலுவலகம் - தரை தளம், ஜினித் ஹவுஸ், கேஷவ்ராவ் கன்னு மார்க், ரேஸ் கோர்ஸ் எதிரில், மகாட்வலி, (மும்பை - 34 தொலைபேசி : 022-39586300.

கிளை அலுவலகம் : HDB ஃபைனான்சியல் சர்வீஸ் லிமிட்டெட், எண். 50, II வது தளம், VNR காம்ப்ளக்ஸ், வண்டிதா நகர், புதுவீதிஷ்சேரி, மதுரை - 625 003 தமிழ்நாடு. வலைதளம் : www.hdbfs.com மின்னஞ்சல் முகவரி : compliance@hdbfs.com

பிற்சேர்க்கை IV - சுவாதீன அறிவிப்பு (பார்க்க - விதி 8(1))

இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீஸ் லிமிட்டெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலராக, சிலைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் சிலைக்காப்பு வலைக்காட்டம் 2002 (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) ன் கீழும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) - உடன் படிக்க - பிலைக்கொத்து பாதுகாப்பு (நமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 3 ன் படியும் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தை செயலுறுத்தி, அந்தந்த கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பை அனுப்பியதன்றது. அக்கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகை மற்றும் உண்மையில் பணமாக்கப்படும் வரை மேற்சொன்ன வரும் ஒப்பந்த விதத்திலான வட்டி, செலவுகள், கட்டணங்கள் போன்றவற்றை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்தக் கோரினார்.

மேற்சொன்ன, கடன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்கள் அத்தொகையை திருப்பி செலுத்த தவறியபடியால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர்கள் / கூட்டு கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன 'சட்டத்தின் பிரிவு 13(4) உடன் படிக்க மேற்சொன்ன விதிகளின் விதி 8 ன் படி அத்துடன் குறிப்பிட்டுள்ள தேதியில் அடையான சுவாதீனம் எடுத்துள்ளார்.

குறிப்பாக மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இச்சொத்துடன் எந்தவொரு விலைக்கும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், இச்சொத்தின் மீது ஏற்படுத்தப்படும் எவ்வகையான விலைக்கும், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீஸ் லிமிட்டெட் - கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை மற்றும் அத்தற்கு தேதிகளிலிருந்து மேற்சொன்ன வரும் வட்டி, செலவுகள், கட்டணங்கள் ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது.

கடன்தார் மற்றும் கூட்டு கடன்தார் விபரங்கள், செட்டில் சொத்து, கடன் கணக்கு எண்கள், UIC எண், நிலுவைத்தொகை, கோரிக்கை அறிவிப்பு மற்றும் சுவாதீன தேதி உள்ளிட்ட தகவல்கள் இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

1). கடன்தார், கூட்டு கடன்தார் / ஜாமீன்தார் பெயர், 2). கடன் கணக்கு எண் 3). அனுமதிக்கப்பட்ட கடன் தொகை 4). ஜாமீன் சொத்துக்களின் விபரங்கள் 5). கோரிக்கை அறிவிப்பு தேதி 6). கோரப்பட்ட தொகை இந்திய ரூபாயில் 7). சுவாதீன தேதி

1). கடன்தார் / கூட்டு-கடன்தார் பெயர் - 1, பிலால் பிரியாணி, எண் : 25, பள்ளிவாசல் காம்பௌண்ட், வத்தலகுண்டு சாலை, பேகம்பூர் திண்டுக்கல், பேகம்பூர் - 624002 தமிழ்நாடு. மேலும் - பழைய T.s எண். 124 124/1 Part, புதிய TS எண். 124/2 1 Part, பிளாக் எண். 2, வார்டு 5, நகர்வர தெரு, பேகம் பிராமர், திண்டுக்கல் டவுன், நகல் நகர் - 624003. 2. R மதனமுதா பேகம், எண் : 33/36, நகர்வர தெரு, பள்ளப்பட்டி, திண்டுக்கல், பேகம்பூர் - 624002 தமிழ்நாடு. 3. A ராமமத்துல்லா, எண் : 33/36, நகர்வர தெரு, பள்ளப்பட்டி, திண்டுக்கல், பேகம்பூர் - 624002 தமிழ்நாடு. 2). கடன் கணக்கு எண். 51310183. 3). அனுமதிக்கப்பட்ட கடன் தொகை - கடன் கணக்கு எண். 51310183 ல் இந்திய ரூபாயில். 82,00,000/- (ரூபாய். எண்பத்து இரண்டு இலட்சம் மட்டும்). 4). பட்டியல் சொத்து விபரம் :- ஜாமீன் சொத்து - 1 - திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், நகஸ்நாயக்கன்பட்டி சார்பதிவு அலுவலகம், திண்டுக்கல் டவுன், வார்டு எண். 5, பிளாக் எண். 2, பேகம்பூர், நகர்வர தெரு, பழைய டவுன் சர்வே எண். 124 ல் உள்ள 1 ஏர்கர் 1970 சதுர அடி. இதில் தெற்கு பாதி பாகம் 22765 சதுர அடி இதில் தென்மேற்கு மூலை பாகம் நீங்கலாக, மீதம் வடக்கு பாகமாக டவுன் சர்வே எண். 124/1 Part, புதிய உட்பிரிவு சர்வே எண். 124/23 ல் உள்ள 765 சதுர அடி அதாவது 71.10 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு - புதிய T.S. எண். 124/21 Part (இதில் உள்ள இளம் எண். 2) ல் உள்ள சொத்து, கிழக்கு - புதிய T.S. எண். 124/22 ல் M.V. தேக் சொலமமுக்கு சொந்தமாக உள்ள சொத்து, தெற்கு - புதிய T.S. எண். 124/33 பகுதியில் உள்ள 12 அடி அகல கிழமெல் சாலை, மேற்கு - புதிய T.S. எண். 124/24 ல் ஆயிஷம்மாளுக்கு சொந்தமாக உள்ள சொத்து, இதன் மத்தியில் உள்ள சொத்தின் அளவிடுகளாவன - கிழமெல் வடக்கு 26 அடி., தெற்கு 23-3/4 அடி., தென்வடல் கிழக்கு 30 அடி., மேற்கு 31-1/2 அடி., என மொத்தம் 7665 சதுர அடி அதாவது 71.10 சதுர மீட்டர். ஜாமீன் சொத்து - II - திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், நகஸ்நாயக்கன்பட்டி சார்பதிவு அலுவலகம், திண்டுக்கல் டவுன், வார்டு எண். 5, பிளாக் எண். 2, பேகம்பூர், நகர்வர தெரு, பழைய டவுன் சர்வே எண். 124 ல் உள்ள 1 ஏர்கர் 1970 சதுர அடி., இதில் தெற்கு பாதி பாகம் 14562 சதுர அடி இதில் வடக்கு பாகம் நீங்கலாக, மேற்கு பாகம் நீங்கலாக, கிழக்கு பாகமாக டவுன் சர்வே எண். 124/1 Part, புதிய உட்பிரிவு சர்வே எண். 124/21 Part ல் உள்ள 674 சதுர அடி பரப்பளவு கொண்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு - புதிய T.S. எண். 124/21 Part ராதிகா கபே அம்மை மாலிக் என்பவருக்கு சொந்தமாக உள்ள சொத்து மற்றும் கிழமெல் கால்வாய், கிழக்கு - கிழமெல் கால்வாய் மற்றும் புதிய T.S. எண். 124/21 ல் உள்ள சொத்து, மேற்கு - தியT.S. எண். 124/21 பகுதியில் M. பரிஜா மேகத்துக்கு சொந்தமான சொத்து மற்றும் தென்வடல் பொது சந்து, தெற்கு - மின்னஞ்சல் :- legaldoctors@gmail.com : புதிய T.S. எண். 124/23 (இதில் உள்ள இளம் எண். 1 சொத்து) ல் உள்ள சொத்து மற்றும் புதிய T.S. எண். 124/24 ல் ஆயிஷம்மாளுக்கு சொந்தமாக உள்ள சொத்து, இதன் மத்தியில் உள்ள ஆ வது பாக சொத்தின் மேற்கு புறமாக உள்ள சொத்தின் அளவிடுகளாவன - கிழமெல் வடக்கு 22 அடி., தெற்கு 22 அடி., தென்வடல் கிழக்கு 24-1/4 அடி., மேற்கு 20-1/4 அடி., என மொத்தம் 489-1/2 சதுர அடி., இதில் கிழக்கு புறம், 2 வது பாகத்தின் தெற்கு புற சொத்தின் அளவிடுகளாவன - கிழமெல் வடக்கு 7-1/2 அடி., தெற்கு 7-1/2 அடி., தென்வடல் கிழக்கு 17-3/4 அடி., மேற்கு 17-3/4 அடி., என மொத்தம் 133-3/4 சதுர அடி., இதில் 3 வது பாகத்தின் வடக்கு புற சொத்தின் அளவிடுகளாவன - தென்வடல் மேற்கு 6-1/2 அடி., கிழக்கு (குறுக்கு) கிழக்கு 11-3/4 அடி., கிழமெல் வடக்கு மற்றும் தெற்கு 7-1/2 அடி., என முக்கோண வடிவில் உள்ள மொத்த பரப்பு 24-3/4 சதுர அடி. ஆக 1 முதல் 3 பாகங்கள் சேர்த்து மொத்த பரப்பு 647 சதுர அடி அதாவது 60.14 சதுர மீட்டர், என பட்டியலில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களில் இனம் எனவும், 1 மற்றும் 2 ஆகியன சேர்ந்து மொத்தம் 1412 சதுர அடி பரப்பளவு கொண்ட சொத்து., இதில் கட்டப்பட்ட கதவு எண். 64/1, நடார்வர தெரு, வரி விதிப்பு எண். 901349 மற்றும் அதனுடன் கூடிய இதர உடைமைகள் மற்றும் வைப்புத்தொகைகள் மற்றும் அனைத்து இதர வகைகள் மற்றும் அனைத்து பாதை உரிமைகள். மேற்சொன்ன சொத்து திண்டுக்கல் டவுன் எல்லைக்குள் அமைந்துள்ளது. 5). கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.08.2026. 6). கோரிக்கை தொகை – 17.08.2026 ம் தேதியில் படி, ரூ 77,09,667.5/- (ரூபாய். எழுபத்து ஏழு இலட்சத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்து ஏழு மற்றும் பைசா நூற்பது மட்டும்) மற்றும் உண்மையில் பணமாக்கப்படும் வரை வரும் ஒப்பந்த விதத்திலான வருங்கால வட்டி, நிலுவு செலவுகள், செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியன. 7). சுவாதீன தேதி : 03.11.2026.

தேதி : 04.11.2026
இடம் : மதுரை

ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
M/s. HDB ஃபைனான்சியல் சர்வீஸ் லிமிட்டெட்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,

201-A, டாக்டர் அழகேசன் ரோடு, சாம்பாபா காலனி, கோயமுத்தூர் - 641 011.

தொ.பே.எண். 0422 2442713, மின்னஞ்சல் - cooptexcbe@gmail.com

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான ஈரோடு வில்லரசம்பட்டி மற்றும் ஈரோடு நசியனூர் (மஞ்சள் வளாகம்) மற்றும் வேலூர் கிடங்குகளிலிருந்து வேட்டிகள், சேலைகள் விநியோகத்திட்டம் பொங்கல் 2027ன் கீழ் (DSDS Pongal 2027) துணிகள் தமிழ்நாட்டில் உள்ள நுகர்பொருள் வாணிப கழக கிடங்குகளுக்கு கொண்டு செல்வதற்கு லாரிகள் சொந்தமாக வைத்திருப்பவர்களிடமிருந்து போக்குவரத்துக் கட்டணம் மற்றும் ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி கட்டணத்